**2020 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரன கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சி தொடர்பாக வரும் செய்திகளை பார்த்து உடன் நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களுக்கு அனுப்ப ஏதுவாக கீழ்கண்ட தினசரி நாளிதழ்கள் நகராட்சிக்கு வாங்கி வருவதற்கு ஆண்டு சந்தா தொகையினை கீழ்கண்டவாறு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | ஆண்டு சந்தா தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தினமலர் | 2560/– |
| 2. | தினதந்தி | 2000/– |
| 3. | தி இந்து | 2500/– |
| 4. | தினகரன் | 1920/– |
| 5. | தினமணி | 2604/– |
| | **மொத்தம்** | **11584/–** |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தினசரி நாளிதழ்கள் 01.01.2020 முதல் வாங்கி வருவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3825, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 60000/– மதிப்பீட்டில் நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் உள்ள பிரிண்டர்களின் டோனர்கள் ரீபிள் மற்றும் சர்வீஸ் செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 3824, நாள். 31.03.2020ல் அனுமதியளித்ததற்கிணங்க 09.04.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பிரிண்டர் கேர்,<br>28/75, பங்களா தெரு,<br>புதுப்பேட்டை,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 380/- (1 No)<br>Drum Change –<br>Rs. 355/- (1 No) |
| 2. | S.M.T. Infotech,<br>36,புதுப்பேட்டை,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 400/- (1 No)<br>Drum Change –<br>Rs. 400/- (1 No) |

| | | |
|---|---|---|
| 3. | M.S.N. Infotech,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 450/- (1 No)<br>Drum Change –<br>Rs. 450/- (1 No) |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் பிரிண்டர் கேர், 28/75, பங்களா தெரு, புதுப்பேட்டை, விருத்தாசலம் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3826, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, தாஷ்கண்ட் நகர், வார்டு எண். 8, ஆலடி ரோடு, வார்டு எண். 10, முருகன் கோயில் தெரு பகுதியில் நான்கு நபர்களுக்கு கொரோனோ வைரஸ் தொற்று ஏற்பட்டு மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அதனை தொடர்ந்து நகரில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமில்லாமல் அனைத்து தெருக்களிலும் பிளிச்சிங் பவுடர் கலந்து சுண்ணாம்பு நீர் தெளிக்க வேண்டியுள்ளதால் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர பொது சுகாதார அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் கூடுதலாக 10 டன் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் 3 டன் பிளிசிங் பவுடர் ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேஷன் நாமக்கல், நிறுவனத்திடம் வாங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது சுகாதாரம் நலன் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும், ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேஷன் நாமக்கல், நிறுவனத்தில் மேற்கண்ட கிருமி நாசினிகள் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3721/2018/எச்1.

**தீர்மானம் எண். 3827, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4.**

2019ஆம் ஆண்டில் தேர்தல் முன்னேற்பாடு பணிகளுக்க தேவையான ஆவணங்கள் அவ்வப்போது நகல் எடுத்த வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு orralation Statement மற்றும் வாக்கு சாவடி பட்டியல் ஆகியவை நகல் எடுத்து அனுப்பிய வகையில் ரூ. 9245/– ஐ விருத்தாசலம், பாலாஜி கம்யூனிகேஷன்ஸ் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3828, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் எண். 5.**</u>

விருத்தாசலம் நகராட்சியில் 2018–2019ஆம் ஆண்டின் தணிக்கை நடைபெற்றபோது தேவையான ஆவணங்கள் நகல் எடுத்த வகையில் மற்றும் தணிக்கை முடிக்கப்பட்டு 5 தணிக்கை அறிக்கைகள் ஜெராக்ஸ் எடுத்து தயார் செய்த வகையில் செலவின தொகை ரூ. 12350/– (ரூபாய் பன்னிரன்டாயிரத்து முன்னூற்றி ஐம்பது மட்டும்) ஐ பாலாஜி கம்யூனிகேஷன்ஸ் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3829, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் எண். 6.**</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 மற்றும் 18 பூதாமூர் முனியப்பர் தெரு பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் வரவில்லை என புகார் தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதில் பைப்லைன் இல்லாத காரணத்தினால் அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி போர்கால அடிப்படையில் புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 17 மற்றும் 18 பூதாமூர் முனியப்பர் தெரு பகுதியில் புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணி | திரு .டி.ராஜாராம்பட்டு, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 48000/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3830, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 7.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் ராஜீவ்காந்தி நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் வரவில்லை என புகார் தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதில் பைப்லைன் இல்லாத காரணத்தினால் அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி போர்கால அடிப்படையில் புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் ராஜீவ்காந்தி நகர் பகுதியில் புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணி | திரு .டி.ராஜாராம்பட்டு, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 29000/- |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3831, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 அண்ணா நகரில் அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி போர்கால அடிப்படையில் 8” புதிய வால்வு அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 13 அண்ணா நகரில் 8” புதிய வால்வு அமைக்கும் பணி | திரு .வி.ரமேஷ், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 19500/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3832, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 காட்டுக்கூடலூர் ரோடு அண்ணா நகர் வடக்கு பகுதியில் அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி போர்கால அடிப்படையில் புதிய பகிர்மான குழாய் மற்றும் சிண்டெக்ஸ் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 13 காட்டுக்கூடலூர் ரோடு அண்ணா நகர் வடக்கு பகுதியில் புதிய பகிர்மான குழாய் மற்றும் சிண்டெக்ஸ் அமைக்கும் பணி அமைக்கும் பணி | திரு .வி.ரமேஷ், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 59000/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3833, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 10.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கண்டியங்குப்பம் நகராட்சி துவக்கப்பள்ளி பைப்லைன் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 2 கண்டியங்குப்பம் நகராட்சி துவக்கப்பள்ளி பைப்லைன் அமைக்கும் பணி | திரு .வி.ரமேஷ், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 8750/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3834, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 11.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 கல்லூரி நகர் மற்றும் பழமலைநாதர் நகரில் பைப்லைன் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சி வார்டு எண் 26 கல்லூரி நகர் மற்றும் பழமலைநாதர் நகரில் பைப்லைன் அமைக்கும் பணி. | திரு .வி.ரமேஷ், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 7400/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3835, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 12.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நேரடி மின் மோட்டார் இயக்க பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் 30 நபர்களை மாதம் ரூ. 600/– வீதம் விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரை நீட்டித்துக்கொள்ள இந்நகராட்சியின் மன்ற தீர்மான எண். 3701, நாள். 31.12.2019 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் புதியதாக 18 வது வார்டுக்கு ஒரு நபரை நியமிக்க இந்நகராட்சியின் குழாய் பொருத்துனர்கள் குறிப்பிற்கிணங்க, 30 நபர்களுடன் கூடுதலாக ஒரு நபரை விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் டிசம்பர் 2020 வரை ரூ. 600/– வீதம் நியமித்துக்கொள்ளவும் அதற்கு ஏற்படும் தோராய செலவினம் மே மாதம் 2020 முதல் டிசம்பர் 2020 வரை ரூ. 4800/– க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3836, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சியில் கொரானோ வைரஸ் (COVID – 19) பராவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்ககோரி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை ,மாவட்ட ஆட்சியர், கடலூர் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,செங்கல்பட்டு மற்றும் சார் ஆட்சியர்,விருத்தாசலம் ஆகியோர் ஆய்வு கூட்டத்தில் அறிவுறத்தியதற்கிணங்க பொதுமக்களின் நலன் கருதி கொரானோ வைரஸ் (COVID – 19) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | 9000 எண்ணிக்கை முககவசம் ( FACE MASK) சப்ளை செய்யும் பணி | திரு.சி.பாண்டு, நகராட்சி பொறியாளர் அவர்களால் செலவு செய்யப்பட்டது. | 9000/– |
| 2. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 11 இடங்களில் கொரானோ விழிப்புணர்வு டிஜிட்டல் பேனர் அமைக்கும் பணி | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 43725/– |
| 3. | விருத்தாசலம் நகராட்சி பேருந்து நிலையத்தில் கொரானோ வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 8 இடங்களில் பொதுக்கள் கைகழுவ வாஷ் பேஷின் வைத்து பைப்லைன் அமைக்கும் பணி | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 35600/– |
| 4. | விருத்தாசலம் நகராட்சி அம்மா உணவகத்தில் பார்சல் கட்டுவதற்கு 2000 எண்ணிக்கை டிபன் கப் ,2000 எண்ணிக்கை சாப்பாடு கப் மற்றும் 4000 எண்ணிக்கை சாம்பார் கவர் சப்ளை செய்யும் பணி. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 16800/– |
| 5. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 34 இடங்களில் கொரானோ முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சவுக்கு மரம் கொண்டு சாரம் அமைக்கும் பணி. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 169000/– |
| 6. | விருத்தாசலம் நகராட்சிக்கு 70 எண்ணிக்கை பேனர் (மளிகை கடை விபரம்,நடமாடும் காய்கறி கடை விளம்பரம் ,விழிப்புணர்வு விளம்பரம் மற்றும் தற்காலிக காய்கறி கடை மாற்றம் விபரம்) சப்ளை செய்யும் பணி. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 34500/– |
| 7. | விருத்தாசலம் நகராட்சி பொதுமக்களுக்கு வெளியே வர அனுமதி சீட்டு A4 size sticker 27000 எண்ணிக்கை மற்றும் A5 size அனுமதி சீட்டு 27000 எண்ணிக்கை மூன்று வண்ணங்களில் அச்சடிக்கும் பணி. | Sathya Bags & Printers, No.6,Busstand, Junction Road, Vriddhachalam | 1,75,230/– |

| | | | |
|---|---|---|---|
| 8. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 8 இடங்களில் கொரானோ வைரஸ் பரவாமல் தடுக்க கிருமி நீக்கி சுரங்கம் (Corona Virus Tunnel) அமைக்கும் பணி. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 402000/- |
| 9. | கொரானோ ஒழிப்பு பணியாளர்களுக்கு 260 எண்ணிக்கை அடையாள அட்டை வழங்கும் பணி | குரு கலர் லேப், விருத்தாசலம். | 13000/- |
| 10. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்க 3 எண்ணிக்கை டிரைலருடன் கூடிய டிராக்டர் (ஒரு வண்டிக்கு நான்கு ஆட்களுடன் ) 15 நாட்களுக்கு வாடகைக்கு வழங்கும் பணி | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 219000/- |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3837, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14.**

மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் உத்தரவின் படி கடலூர் மாவட்டத்தில் 144 ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளதாலும், விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் நகரில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் டெங்கு பணியாளர்கள் அனைவருக்கும் முககவசம் வழங்க வேண்டியுள்ளதாலும் தற்சமயம் கையிருப்பு 2200 எண்ணிக்கை மட்டுமே உள்ளது. எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் உத்தரவின்படி ஒரு மாதத்திற்கு தேவையான முககவசம் வாங்கி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படியும், பொது சுகாதாரம் நலன் கருதியும் இந்நகராட்சியின் கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களின் நலன் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் Dolphin Tailors & Uniforms, 1.Duraisami Pillai Street, WestTambaram,Chennai-600 045 அவர்களிடம் 12000 முக கவசம் வாங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. சுகாதாரம் நலன் கருதியும் இந்நகராட்சியின் கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களின் நலன் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் Dolphin Tailors & Uniforms, 1.Duraisami Pillai Street, WestTambaram,Chennai-600 045 அவர்களிடம் 12000 முக கவசம் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1685 /20/எச்1

**தீர்மானம் எண். 3838, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று உள்ள பகுதிகளில் நீர்த்த சுண்ணாம்பு தெளிப்பதற்கு தற்சமயம் கையிருப்பு குறைவாக உள்ளது எனவும் உடனடியாக ,ஸ்ரீகாளியம்மன் டிரேடர்ஸ் கார்பிரேஷன் நாமக்கல், 10டன் வாங்கி வழங்குமாறும் 21.04.2020ம் நாளிட்ட துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் குறிப்பு அளித்துள்ளனர். துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் குறிப்பினை ஏற்று கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர பொது சுகாதார அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் 10டன் நீர்த்த சுண்ணாம்பு ,ஸ்ரீகாளியம்மன் டிரேடர்ஸ் கார்பிரேஷன் நாமக்கல், நிறுவனத்திடம் வாங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. பொது சுகாதாரம் நலன் கருதியும், பொது மக்கள் நலன்கருதியும், ,ஸ்ரீகாளியம்மன் டிரேடர்ஸ் கார்பிரேஷன் நாமக்கல், நிறுவனத்தில் மேற்கண்ட கிருமி நாசினிகள் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3721/2019/எச்1

**தீர்மானம் எண். 3839, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனா COVID-19 வைரஸ் பொதுமக்களுக்கு பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கை கிருமி நாசினி கொண்டு தெளிப்பான் வாகனம் மூலம் செய்யப்பட்டு 11.04.2020 அன்று நடைபெற்ற கூட்டத்தில் சார் ஆட்சியர் அவர்களின் மூலம் நியமன செய்யப்பட்ட Nodal Officer அவர்கள் அறிவுரையின் படி போதிய கிருமி நாசினிகள் கையிருப்பு வைத்துக்கொள்ள தெரிவித்துள்ளதன் பேரிலும், துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் குறிப்பினை ஏற்றும் பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் Agro Environment Servie, Madurantakam அவர்களிடம் ஹைப்போ குளோரைடு 1 % 2000லிட்டர் மற்றும் கையுறை 2000 எண்ணம் வாங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3721 /19/எச்1

**தீர்மானம் எண். 3840, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 17.</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்கள் 15.04.2020ம் நாளிட்ட வலையதள செய்தி குறிப்பில் விருத்தாசலம் நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உ.ள வீடுகளில் சேகரமாகும் கழிவுகளை தனியாக சேர்ந்து Tamil Nadu Waste Management Ltd., 323, P.H. Road, Chennai-29. (Common Bio Medical Wastes Treatment facility) நிறுவனத்திடம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதனை தொடர்ந்து கொரோனா பாதிப்புக்குள்ளான பகுதியான பாத்திமா நகர், தாஷ்கண்ட் நகர், மற்றும் அலடி ரோடு பகுதியில் தனிமைபடுத்தப்பட்டுள்ள வீடுகளில் சேகரமாகும் குப்பைகள் மற்றும் மருத்துவ கழிவுகளை மேற்கண்ட நிறுவனம் 1 கிலோ கழிவுகளை ரூ.46/- எடுத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளனர். அதனை தொடர்ந்து இந்நகராட்சியின் கொரோனா தொற்று உள்ள பகுதிகளில் தனிமைபடுத்தப்பட்ட வீடுகளில் சேகரமாகும் குப்பைகள் மற்றும் மருத்துவ கழிவுகளை எடுத்துச்செல்ல அந்நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள நிறுவனம் எடுத்துச் செல்லும் குப்பைகள் மற்றும் கழிவுகளை எடுத்துச்செல்ல ஆகும் செலவீனத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3721 /19/எச்1

**தீர்மானம் எண். 3841, நாள். 30.04.2020.**
**அனுமதிக்கப்பட்டது**